[1971 டிசம்பர் 16

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பழுதுபட்ட பேருந்துகளின் விவரம் கேட்டார்கள். கடந்த 13-ம் தேதி நாகர்கோவிலிலிருந்து, சென்னைக்கு வந்த பேருந்து, லைட்டு இல்லாததால் மூன்று மணி நேரம் காலதாமதமாகியிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எனக்குத் தெரியாது ; இப்பொழுதுதான் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நெடுந்தூர பேருந்துகளில் இரவு நேரத்தில் இரண்டு ட்ரைவர்களை அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரவு நேர பேருந்துகளில், இரண்டு ட்ரைவர்கள் தான் நியமிக்கப்படுவார்கள்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, ட்ரைவர்களே இல்லாமல் வண்டிகள் ஓட்டப்போகிறோம் என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்விக்கு ஒரு கேள்வியா ? அது அனுமதிக்கப்படவில்லை.

மதுரை-இராசசிங்கமங்கலம் விரைவுப் பேருந்துப்பணி

* 489 **வினா—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து, சிவகங்கை, இளையான்குடி வழியாக, இராசசிங்கமங்கலம் வரை தமிழ்நாடு அரசு பேருந்து (விரைவு வண்டி) போய் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இராசசிங்கமங்கலத்திலிருந்து மதுரைக்கு செல்லும் பேருந்து வழித்தடப்பகுதிகளில் போதிய பேருந்துகள் விடப்பட்டிருப்பதால் இவ்விரு இடங்களுக்குமிடையே நேரடிப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்வது அவசியமில்லை எனக் கருதப்பட்டது.

போக்குவரத்துத் துறையினரால் வாடகைக்கார்கள் விடப்படுதல்

* 490 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் போக்குவரத்து இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் வாடகைக்கார்கள் ((taxis)) விடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

1971 டிசம்பர் 16]

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, போக்குவரத்து வசதியில்லாத, பேருந்துகள் செல்லாத பகுதியில், பொது மக்களுக்கு வசதிசெய்வதை முன்னிட்டு, அரசாங்கமே அங்கு வாடகை டாக்சிகள் விட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகையினால் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வீரராகவசாமி கோவில் நிதி

*** 491 வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 23—6—1967, 8—5—1968 தேதிகளுள்ள திருப்பூர் வீரராகவ பெருமாள், விஸ்வேஸ்வரசாமி கோயில்களின் பணத்தை பயன் படுத்திக் கொண்டார்கள் என்பது பற்றிய விண்ணப்பங்கள் அமைச்சர் அவர்கட்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இம்மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும் உதவி ஆணையர் செய்துள்ள பரிந்துரைக்கிணங்க இக்கோவிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு கோயில் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கிற ஏராளமான குறைபாடுகள் இன்னும் களையப் படவில்லை. குறைபாடுகளை போக்கவும், பொதுமக்களுடைய பணம் விரயமாகாமல் இருக்கவும், தவறுகளைக் கண்டுபிடிக்கவும் தனியாக அதிகாரியை நியமிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தகவல் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. வாடகைப் பணத்தை கையாண்டதற்காக நிர்வாகி ஐயர் மீது குற்றம் சாட்டப்பட்டு பதவி விலக்கம் செய்து வேறுதகுதியுள்ள உறுப்பினரை நியமித்து, வாடகையை அதிகப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சட்டப்படி அதிகம் செய்ய நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றாலும், சமாதனமான முறையில் சந்தித்துப்பேசி ரூ. 11,800 என்று இருந்த வாடகையை மாற்றி, ரூ. 18,300 என்று செய்யப் பட்டிருக்கிறது. குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆலயத்தின் உண்டியல்.